தமிழ் ஓசை

# தமிழ்க்காப்புத் தலைவர் பேராசிரியர் சி. இலக்குவனார்

–இலக்குவனார் திருவள்ளுவன்

> **“தமிழுக்காக வாழ்ந்தோர் பலர்; தன்மானத்திற்காக வாழ்ந்தவரும் பலர்; தன்மான இயக்கத்தில் தளமாய் நின்று தமிழ் வளர்த்தோர் மிகச் சிலர்; அவர்களுள் ஒருவராகக் குறிப்பிடத்தக்கவர் கொள்கை மறவர் பேராசிரியர் சி. இலக்குவனார். தமிழ் நலம் காப்பதற்காக இந்தி மொழித்திணிப்பை எதிர்த்துப் போரிட்ட தலைவர்களில் தலைமையிடம் பெறுபவர் இலக்குவனார்.**

"யான் வேறு; இலக்குவனார் வேறு இல்லை. அவர் செய்யும் பணிகளில் எல்லாம் எனக்கும் பொறுப்பும் பங்கும் உண்டு" எனத் தன்மானத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களால் தமக்கு இணையாகப் போற்றப் பெற்றவர்.

"இன்றமிழ்ப் புலமைமிகு இலக்கு வனார்...

பன்னூற் புலமையுடைய இலக்குவனார்...

நுண்மாண் நுழை புலமும் அஃகி அகன்ற அறிவுக் கூர்மையும் ஆய்வுத்திறனும் இணைந்த பேராற்றலைப் பெருமளவில் பெற்றிருக்கும் பேராசிரியர் இலக்குவனார்...

ஓர் அரிய ஆராய்ச்சியாளர்; அஞ்சா நெஞ்சுடை அருந்தமிழ்க்குரிசில்; நேர்மையின் நிலைக்களன்."

எனப் பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பெற்றவர்.

"இலக்குவனார் அவர்கள் இந்தியை எதிர்த்துச் சிறை சென்றார்கள். தமிழ் வீறு கொண்டு வாழ வேண்டும்; பெருமையுடன் வாழவேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்கள். அவர் தயாரித்தவர்கள் எல்லாம் மாணவர்கள் என்று சொல்வதை விட அழுத்தம் திருத்தமான போர்வாள்களைத்தான் அவர் தயாரித்தார் என்று சொன்னால் மிகப் பொருத்தமாக இருக்கும்.

அவர் யாருக்கும் தலைவணங்காமலே வாழ்ந்தவர். அவர் கனகவிசயனை எதிர்த்து வெற்றி கண்ட சேரன் செங்குட்டுவனைப் போல் இருந்தார்.

எனக்குத் தன்மானத்தைக் கற்றுத் தந்தவர் அவர்"

என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெருமிதத்துடன் போற்றப் பெற்றவர்.

"மறைமலை அடிகளாரின் துணிவும், நாவலர் பாரதியாரின் உரமும் தமதெனக் கொண்டு எத்தகு இன்னலையும் துச்சமென ஏற்றுத் தமிழே தமது மூச்செனா விளங்கி உயிர்த்தும் வாழும் செம்மல் அவர். முத்தமிழும் முதுமொழியுரையும் எப்பாவலரும் ஏற்றற்காகும் முப்பால் தரும் மூதறிவும் நற்பாலவை விளக்கும் பொற்பின் தொல்காப்பியமும் கற்பவர்தம் சிந்தை நிறைக்கும் நற்றமிழ்ச் சங்கப் பாடல்களும் இலக்குவனாரின் இனிய நெஞ்சமாகும்." என இனமானப் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களால் கவிதை நடையில் படம் பிடிக்கப் பெற்றவர்.

## இந்தி எதிர்ப்புப் படைத்தளபதி

"தமிழ் மொழி வாழ்ந்தால் தமிழகம் வாழும்" எனும் உயிர்ப்போடு எழுந்தது தமிழ்க் காப்புக் கழகம். "தமிழில் பேசுக! தமிழில் எழுதுக! தமிழில் பெயரிடுக! தமிழில் பயிலுக" என்னும் நான்மணிகளைச் செயற்படுத்தும் செம்மாப்புடன் நான்மாடக்கூடல் திருநகரில் 6-8-1952 -இல் எழுந்தது தமிழ்ப்பாதுகாப்புக் கழகம். அதன் தலைவரும் நிறுவனருமானார் பேராசிரியர் சி. இலக்குவனார்.

இந்தி எதிர்ப்புத் தலைவர்களில் தலைமையாளர்

"தமிழுக்காக வாழ்ந்தோர் பலர்; தன்மானத்திற்காக வாழ்ந்தவரும் பலர்; தன்மான இயக்கத்தில் தளமாய் நின்று தமிழ் வளர்த்தோர் மிகச் சிலர்; அவர்களுள் ஒருவராகக் குறிப்பிடத்தக்கவர் கொள்கை மறவர் பேராசிரியர் சி. இலக்குவனார். தமிழ் நலம் காப்பதற்காக இந்தி மொழித்திணிப்பை எதிர்த்துப் போரிட்ட தலைவர்களில் தலைமையிடம் பெறுபவர் இலக்குவனார்.

1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வலுப் பெற்றது. இலக்குவனார், மாணவர் இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தலைவராகவும், காரணராகவும் இருக்கின்றார். என்று பதினான்கு குற்றச்சாற்றுகளைக் கூறிக் காவல்துறை இவரை 1-2-1965 ஆம் நாள் கைது செய்தது. இதன் காரணமாகக் கல்லூரியினின்றும் நீக்கப் பட்டார். அன்றைய அரசு அஞ்சும் வண்ணம் இந்தியை எதிர்த்து இவர் போராடினார்.

புரட்சிக் கவிஞரின் தமிழ் இயக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுத்தவர்

இலக்குவனார் தமிழ்ப்பற்று மிக்கவர். தமிழ் மொழியைக் காப்பதற்காகவே வாழ்க்கை முழுவதும் போராடியவர். தமிழைப் பாதுகாப்பதற்கும், பல்துறைகளில் வளர்ப்பதற்கும் மதுரையில் தமிழ்க் காப்பதற்கும் கழகம் என்ற பெயருடன் ஒரு கழகத்தை நிறுவினார். அதன் சார்பில் மாணவர்களுடன் ஊர்வலமாகச் சென்று வணிக நிறுவனங்கள், விற்பனையகங்கள், கடைகள் முதலியவற்றின் பெயரிப் பலகைகளில் உள்ள பெயர்களை தமிழில் எழுதும்படிக் கோரினார். புரட்சிக் கவிஞரின் தமிழியக்கம் கூறும் கருத்துக்களையே இக்கழகத்தின் கொள்கைகள் ஆக்கினார். பாவேந்தர் பாரதிதாசன் இக்கழகத்தின் பணிகளைப் பாராட்டி உணர்ச்சி பொங்கப் பாடிப் பரவியுள்ளார்.

## சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டானவர்

"பகுத்தறிவு நோக்கில் பெரியாரைப் பின்பற்றினார். மொழிநோக்கில் மறைமலை அடிகளாரைப் பின்பற்றினார். இந்தி எதிர்ப்பில் நாவலர் சோமசுந்தர பாரதியாரைப் பின்பற்றினார். வறுமையிலும் செம்மையுடையவராக விளங்குவதில் புலவர் பெருஞ்சித்திரனாரைப் பின்பற்றினார். புறநானூற்றில் வருகின்ற வேலைக் கையிலெடுப்பது போலத் திண்மையோடு (வலிமையோடு) வாழ்ந்து காட்டினார். வன் தொடர்களை மிகுதியாகப் பின்பற்றினார். வல்லினப் பேராசியராய் விளக்கி இளைய சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கினார்.

1910 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ஆம் நாள் தோன்றி 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3-ஆம் நாள் நம்மை விட்டுப் பிரிந்த பேராசிரியர் சி. இலக்குவனார் அவர்களின் நினைவை ஆன்றோர்கள் உரை மூலம் கண்டோம். தமிழ் ஆட்சி மொழியாக, அலுவல் மொழியாக, கல்வி மொழியாக, அறமன்ற மொழியாக, இறை மொழியாகப், பன்னாட்டுத் தொடர்பு மொழியாக எங்கெங்கும் என்றென்றும் விளங்க சொல்லாலும் எழுத்தாலும் செயலாலும் போராடிய பேராசிரியரின் எண்ணங்கள் இன்னும் இடேறவில்லை. இவற்றிற்காக இன்றும் தமிழ் அமைப்புகளும் தமிழ் நலம் நாடும் கட்சிகளும் இயக்கங்களும் போராடும் துன்ப நிலைதான் இருக்கின்றது. "இனியேனும் கலையட்டும் தூக்கம்" என நாம் அனைவரும் ஒன்றுபட்டு இயங்கினால்தான் முத்தமிழறிஞரின் தலைமையில் இயங்கும் அரசிற்கு நாம் தோள்கொடுத்துத் துணை நிற்பதாய் அமையும். உயர்தனிச் செம்மொழிக்கு உரிய இடம் உயரிய இடம் உலகெங்கும் கிட்டும்.

இலக்குவனார் வழி நின்று இனிய தமிழைக் காப்போம்.